# மவுண்ட் றூயிட் தமிழ்க் கல்வி நிலையம்

## Mount Druitt Tamil Study Centre


**Mobile: 0449 892 066**

**Email :mtdruitttsc@gmail.com** **Web : www.mtsc.org.au**



**செய்தி மடல் 2021 – 04** **23-10-2021**


**“பட்டினி கிடந்து பசியால் மெலிந்து**
**பாழ்பட நேர்ந்திடினும்**
**கட்டி இழுத்து கால்கை முறிந்து அங்கம்**
**பிளந்து இழந்து துடிதிடினும் பொங்கு**
**தமிழை பேச மறப்பேனோ…”** என்றார் பாரதியார். இவ்வாறு பாவலர்களால் உயிரினும் மேலாக போற்றப்பட்ட நம் **தமிழ்மொழியைக்** கற்பிக்கும் தலையாய கடமையை செவ்வனே செய்யும் மவுண்ட் றூயிட் தமிழ்க் கல்வி நிலையம் தமிழை மட்டுமன்றி மாணவர்களை பண்பு, ஒழுக்கம், பணிவு, தன்னம்பிக்கை, ஆளுமை கொண்ட சிறந்த மாணவர்களாக உருவாக்கி வருகின்றது. எமது கல்வி நிலையத்தில் தமிழை கற்றிட வந்திருக்கும் மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள், ஆசிரியர்கள் அனைவருக்கும் அன்பான வணக்கங்கள். இச்செய்திமடல் மூலம் பின்வரும் விடயங்களை உங்கள் கவனத்திற்குச் சமர்ப்பிக்கின்றோம்.

### *1. வருடாந்த பரிசளிப்பு விழா 2021*

எமது பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா மற்றும் நத்தார் கொண்டாட்டமும் இராப்போசன விருந்தும் அரசாங்க அறிவுறுத்தல்களுக்கு அமைய சுகாதார நடைமுறைகள் மற்றும் கொரோனா பாதுகாப்பு நடவடிக்கைகள் பின்பற்றப்பட்டு பாடசாலை மண்டபத்தை பாவிப்பதற்கு அனுமதி கிடைக்குமிடத்து எதிர்வரும் டிசம்பர் மாதம் 18ம் திகதி (18.12.2021) சனிக்கிழமை அன்று மாலை 5.30 மணிக்கு **PLUMPTON HIGH SCHOOL (141 Hyatts Road, PLUMPTON NSW 2761)** பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அனைவரும் இவ்விழாவிற்கு வருகை தந்து சிறப்பிற்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்




பரிசளிப்பு விழாவுக்கான இரவு உணவு, மண்டப கட்டணம் மற்றும் இதர செலவுகளுக்காக பெற்றோர்களிடமிருந்து இவ்வருடத்திற்கு ஒரு குடும்பத்திற்கு $40.00ஐ எமது கீழ்வரும் பாடசாலை வங்கிக்கணக்கில் செலுத்தி ஒவ்வொரு குடும்பத்திலும் எத்தனை அங்கத்தவர்கள் வருகை தருவார்கள் என்பதனையும் முன்கூட்டியே தெரியப்படுத்தி பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா சிறப்பாகவும் பாதுகாப்பாகவும் நடைபெற பூரண ஒத்துழைப்பு வழங்குமாறு தங்களை பணிவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

Name: **Mount Druitt Tamil Study Centre**
Account Number with BSB: **112 879 043215976**
(Please leave transfer note with your kids name and class as reference.)

உங்களது விபரங்களை எமது பொருளாளருக்கு தெரியப்படுத்துவதுடன் அவரை தொடர்பு கொள்ளவதற்கான விபரங்களுக்கும் :

Name : **P.Maheswarmoorthy** Phone: **0422 519 067**
Email : mtdruitttsc@gmail.com copy to : perammages@gmail.com

### *2. HSC பிரத்தியோக வகுப்பு*

தற்பொழுது மாணவர்களை HSCல் தமிழை ஒரு பாடமாக எடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகளில் தற்போது கிழமை நாட்களிலும் பிரத்தியோக வகுப்புக்களை ஆரம்பித்துள்ளோம் என்பதையும் தங்களுக்கு தெரிவிக்க விரும்புகின்றோம். பெற்றோர்களாகிய நீங்கள் உங்களது பிள்ளைகளை HSCயில் தமிழை ஒரு பாடமாக எடுத்து எமது தேன்மதுர தமிழ் மொழியை இவ்அவுஸ்திரேலியக் கண்டத்தில் பரவும்வகை செய்திட வேண்டி நிற்கின்றோம்.

### *3. ஆண்டிறுதிப் பரீட்சை 2021*

மாணவர்களுக்கான ஆண்டிறுதிப் பரீட்சை 20.11.2021 அன்று முதல் வகுப்பு ஆசிரியர்களினால் ஏற்பாடு செய்யப்பட்டு இணையவழியில் நடாத்தப்படும். இதில் வாசிப்பு, கேட்டு கிரகித்தல், பேசுதல், எழுத்துப்பரீட்சை என்பன அடங்கும். எனவே பரீட்சை தொடர்பான விபரங்களை உங்களது பிள்ளைகளின் வகுப்பு ஆசிரியர்களிடம் கேட்டு அறிந்து கொள்ளவும்.

### *4. அமைச்சர் விருது பெற்ற மாணவர்களுக்கு நினைவு கேடயம் வழங்கல்*

இந்த வருடம் எமது பாடசாலையில் இருந்து 2021 ஆண்டிற்கான அமைச்சர் விருதினைப் பெற்ற யதுசன் முரளீதரன், யாழவன் தமிழ்ச்செல்வன் ஆகிய இரு மாணவர்களுக்கும் அமைச்சர் விருதிற்கான நினைவு கேடயம் வழங்கி கௌரவிக்கும் நிகழ்வும் எமது பரிசளிப்பு விழாவில் நடைபெறவுள்ளது.

### *5. சரஸ்வதி பூஜை* (வாணி விழா)

கடந்த 09.10.2021 அன்று இணையவழி மூலம் இடம் பெற்ற சரஸ்வதி பூஜையிலும் பின்னர் வகுப்பு ஆசிரியர்களால் முன்னெடுக்கப்பட்ட வாணிவிழா இணைய நிகழ்விலும் கலந்து சிறப்பித்த மாணவ செல்வங்களுக்கும் அவர்களை ஊக்கப்படுத்திய பெற்றோர்களுக்கும் அதனை அழகுற தொகுத்து வழங்கிய ஆசிரியர்களுக்கும் பாடசாலையின் நிர்வாகத்தின் சார்பில் பாராட்டுக்களை தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம்.

### *6. பொதுக்கூட்டம் (பெற்றோர் கலந்துரையாடல்)*

பாடசாலையின் யாப்பு திருத்தம் செய்வது தொடர்பாக ஒப்புதல் அளிக்குமாறு கேட்டதற்கு இணங்க, 174 பெற்றோர்கள் உங்களுடைய ஆதரவை பதிவு செய்திருந்தீர்கள். 88% வீதமான பெற்றோர் ஆம் என பதிலளித்துள்ளீர்கள். 11% வீதமான பெற்றோர் பதிலளிக்காது மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டுள்ளீர்கள்.

எதிர்வரும் **30.10.2021 சனிக்கிழமை அன்று பி.ப. 7 மணிக்கு** நடைபெற இருக்கும் பொதுக்கூட்டத்திற்கு சகல பெற்றோர்களையும் சமுகமளிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

Topic: **MTSC General Meeting**

Time: **Oct 30, 2021 07:00 PM Canberra, Melbourne, Sydney**

Join Zoom Meeting

**https://zoom.us/j/92867450073?pwd=TUhkTlBoVEtKR29MWTJOYUJuNUI2Zz09**

Meeting ID: **928 6745 0073** Passcode: **2829**

அத்துடன் இதுவரை எமது பாடசாலை யாப்பினை அங்கீகரித்த பெற்றோர்களுக்கும் நாம் நன்றி கூற கடமைப்பட்டுள்ளோம்.

### *7. 2022ம் ஆண்டிற்குரிய பாடசாலை நிர்வாகக் குழு*

எமது பாடசாலையின் 2022ம் ஆண்டின் நிர்வாகக் குழு அங்கத்தவர்களாக பங்குபற்ற விருப்பமுடையவர்கள் எமது செயலாளர் திரு.சரவணகுமார் ராஜாராம் அவர்களை தொடர்பு கொண்டு அல்லது பாடசாலை மின்னஞ்சல் முகவரியான mtdruitttsc@gmail.com தங்களது விண்ணப்பப்படிவத்தை கையளிக்குமாறு தங்களை தயவாக கேட்டுக்கொள்கின்றோம். (தொலைபேசி இல : 0406 374 039)

புதிய நிர்வாகக் குழு அங்கத்தவர்களாக சேர விரும்புபவர்களுக்கான விண்ணப்பப்படிவத்தை இந்த செய்திமடலுடன் இணைத்துள்ளோம். தங்களுக்கு தேவைப்படுமிடத்து வலைத்தளத்தின் வளங்கள் பகுதியிலிருந்தும் இதனை நீங்கள் தரவிறக்கம் செய்யலாம். விண்ணப்ப முடிவு திகதியான 06.11.2021 மாலை 6 மணிக்கு முன்பாக பூர்த்தி செய்த விண்ணப்பப்படிவத்தை எமது செயலாளருக்கு அனுப்பிவைக்குமாறு தங்களை தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம். இதுவரை காலமும் பாடசாலை நிர்வாகத்தில் பங்குகொள்ளாத பெற்றோர்கள், ஆசிரியர்கள் 2022ம் ஆண்டின் பாடசாலை நிர்வாகத்தில் இணைந்து மவுண்ட்றூயிட் தமிழ் பாடசாலையின் வளர்ச்சிக்கு உதவும்படி தங்களை தாழ்மையுடன் வேண்டிக்கொள்கின்றோம்.

### *8. 2022ம் ஆண்டிற்குரிய பாடசாலை நிர்வாகக் குழு அறிமுகம்*

எமது பாடசாலையின் 2022ம் ஆண்டிற்கான பாடசாலை நிர்வாகக்குழுவில் இணைந்தவர்களை அறிமுகம் செய்யும் நிகழ்வும் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் இடம்பெற உள்ளது. இந்த வருடம் பாடசாலைக்கு பல்வேறுபட்ட சிரமங்களின் மத்தியிலும் மாணவர்களை இணையவழி கற்றலுக்கும் வகுப்பறைக்கற்றலுக்கும் அழைத்துவந்த ஒவ்வொரு பெற்றோர்களுக்கும் 2021ம் ஆண்டின் நிர்வாகத்தின் சார்பில் நன்றியை கூறிக்கொள்வதுடன் வழமைபோல 2022ம் ஆண்டிற்கு தெரிவுசெய்யப்பட்ட பாடசாலை நிர்வாகத்திற்கு தங்களது பூரண ஆதரவினை வழங்குமாறு தங்களை தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

### *9. பாடசாலை விடுமுறை*

எமது பாடசாலை தவணை நான்கின் கடைசி நாளான 18.12.2021 அன்று பரிசளிப்பு விழாவுடன் நிறைவடைந்து எதிர்வரும் 05.02.2022 சனிக்கிழமை அன்று மீண்டும் புதிய வருடத்திற்கான முதலாம் தவணைக்காக திறக்கப்படும் என்பதனையும் உங்களுக்கு அன்புடன் அறியத்தருகின்றோம்.

நன்றி

மவுண்ட்றூயிட் தமிழ்ப் பாடசாலை நிர்வாகம்.